# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **S.T.C. No. 228/2025** |
| Prosecution witness | : | P.W. 1 |
| List of witness | : | L.W. 1 |
| Name | : | சசிகுமார் |
| Father's /Husband Name | : | முருகேசன் |
| Village | : | குடவாசல் காவல் நிலையம் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 34 |
| Occupation | : | முதல் நிலைக் காவலர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 16th day of April 2026. Accused absent. Petition U/s 355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை**

நான் தற்போது குடவாசல் காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.10.2024 ம் தேதிஅன்று காலை 10.00 மணியளவில் நான் நிலைய பொறுப்பிலிருந்த போது உதவி ஆய்வாளர் திரு. கணேசன் என்பவர்க்கு கிடைத்த ரகசிய தகவலின் படி மணப்பறவை பஸ் ஸ்டாப் அருகே அலெக்ஸாண்டர் என்பவர் கஞ்சா விற்பணை செய்வதாக கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று மேற்படி உதவி ஆய்வாளர் பொது நாட்குறிப்பில் பதிவு செய்தும் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு தகவல் தெரிவித்து கொண்டு மேற்படி உதவி ஆய்வாளருடன் நானும் முதல் நிலைக் காவலர் சிவானந்தம் ஆகியோர்கள் மணப்பறவை பஸ்ஸ்டாப் அருகே கண்காணித்த போது அங்கு நின்று கொண்டிருந்த நபரை மேற்படி உதவி ஆய்வாளர் விசாரித்தபோது அவர் தனது பெயர் அலெக்ஸாண்டர் த/பெ. போனிபாஸ் என்று கூறினார். பி ன்னர் அந்த நபரிடம் மேற்படி உதவி ஆய்வாளர் தாங்கள் கஞ்சா விற்பணை செய்து வருவதாக தகவல் கிடைத்திருப்பதாகவும் சோதனை செய்வதற்கு அருகில் உள்ள நீதிபதியிடமோ அல்லது அரசு பதிவு பெற்ற அலுவலரிடமோ அழைத்துசென்று சோதனை செய்ய வேண்டுமென எழுத்து மூலமாக அறிவிப்பு கொடுத்ததற்கு அந்த நபர் என் னை போலீசாராகிய நீங்களே சோதனைசெய்துகொள்ளலாம் என்று எழுத்து மூலமாக சம்மதம் தெரிவித்தார்.

எங்கள் முன்னிலையில் உதவி ஆய்வாளர் அலெக்ஸாண்டரை சோதனை செய்த போது அவரது இடுப்பில் பாலிதீன் பேப்பரில் சுற்றி மறைத்து வைத்திருந்த பொட்டலத்தை பார்த்தபோது அதில் கஞ்சா இருந்தது. அதைப்பற்றி உதவி ஆய்வாளர் விசாரித்தபோது அவரிடம் அரசு அனுமதியோநான் சொன்ன நாள் சொன்ன நேரம் சொன்ன இடத்தில் உதவி ஆய்வாளர் ரோந்து

பணிக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரியை கைது செய்ததாக சொல்லப்படும் இடம் மக்கள் நடமாட்டம்அதிகம் உள்ள இடம் என்றால் சரிதான். நான் சொல்வது போல் உதவி ஆய்வாளர் தடயப்பொருட்களை கைப்பற்றவில்லை என்றாலும் புள்ளிவிவரத்திற்காக எதிரிமீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் எதிரியை சொன்ன நாள் சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றாலும் எதிரிக்கம் இவ்வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல. உரிமமோ இல்லை என்று கூறினார். பின்னர் உதவி ஆய்வாளர் 10.45 மணியளவில் குற்ற காரணம் கூறி கைது செய்து அவரது உறவினருக்கு தகவல் தெரிவித்தார். நாங்கள் எடுத்து சென்ற கை தராசில் எடைப்போட்ட போது மொத்தம் 100 கிராம் அளவு கஞ்சா இருந்தது. உதவி ஆய்வாளர் தலா 10 கிராம் எடை உள்ள கஞ்சாவை இரண்டு பொட்டலாங்களாக ஆய்வுக்கு எடுத்து சீல் வைத்து மீதமுள்ள 80 கிராம் கஞ்சாவை சீல் வைத்து 11 மணியளவில் என் முன்னிலையிலும் சிவானந்தம் முன்னிலையிலும் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார். தனிநபர் சாட்சிகள் யாரும் அங்கு முன் வரவில்லை. கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **(கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் எதிரி மற்றும் தடயப்பொருட்களுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண் 387/2024 சட்டப்பிரிவுகள் 8(c), 20(b)(ii)(A) NDPS Act ன் கீழ் உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய நாங்கள் உதவியாக இருந்தோம். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :-

நான் சொன்ன நாள் சொன்ன நேரம் சொன்ன இடத்தில் உதவி ஆய்வாளர் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரியை கைது செய்ததாக சொல்லப்படும் இடம் மக்கள் நடமாட்டம்அதிகம் உள்ள இடம் என்றால் சரிதான். நான் சொல்வது போல் உதவி ஆய்வாளர் தடயப்பொருட்களை கைப்பற்றவில்லை என்றாலும் புள்ளிவிவரத்திற்காக எதிரிமீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் எதிரியை சொன்ன நாள் சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றாலும் எதிரிக்கம் இவ்வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.16 17:15:51 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.